குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண். 129/2012

அ.சா. 3

2024–ம் ஆண்டு செப்டம்பர் 23–ம் தேதி திங்கள்கிழமை அரசு தரப்பு சாட்சி 03–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மணி | ஜாதி | |
| தந்தை பெயர் | கோவிந்தசெட்டி | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.50 மணி,

Accused Panneerselvam present. Advocate Mr. Srinivasan for accused absent. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை.**

1. நான் ஓமலூரில் குடியிந்து வருகிறேன். ஓமலூர் வட்டம் சாமிநாய்க்கன்பட்டி குரூப் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி 31.03.2014 ல் பணி ஓய்வு பெற்றேன். கடந்த 01.05.2012 ம் தேதி சாமிநாய்க்கன்பட்டி கிராம நிர்வாக அலுவலகத்தில் நானும் கிராம உதவியாளர் அன்பழகன் என்பவரும் வி.ஏ.ஓ– அலுவலகத்தில் இருந்த போது ஓமலூர் காவல் ஆய்வாளர் அவர்கள் அழைத்ததாக தெரியவந்ததின் பேரில் நானும் கிராம உதவியாளர் அன்பழகன் என்பவரும் டால்மியா போர்டு பிரிவு மற்றும அரபிக் கல்லூரி பஸ்டாப் முன்புறமாக சென்றோம். அங்கு ஓமலூர் காவல் ஆய்வாளர் அவர்களும் சந்தேக எதிரி பன்னீர்செல்வம் த/பெ.அழகிரி என்பவரும் இருந்தனர்.

2. ஏற்கனவே ஓமலூர் காவல் நிலையம் வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்து கொண்டு இருந்தார். அப்போது அவர் செய்த குற்றத்தை ஒப்புக் கொண்டு வாக்குமூலம் கொடுத்தார். அதில் கோயம்புத்தூர் ஜுவல்லர்ஸ் உரிமையாளர் திரு.பிரேம்நாத் அவர்கள் திருவணந்தபுரத்திற்கு தங்க கட்டிகள் வாங்கி வர அனுப்பியதாகவும், வாங்கிகொண்டு கல்லடா வால்வா பேருந்தில் சேலம் நோக்கி வரும் போது கரூர் அருகே வரும் போது அவர் கொண்டு வந்த தங்க கட்டி வைத்திருந்த பையின் ஜீப் திருந்திருந்ததாகவும்

சுமார் 2 1/2 கிலோ தங்க கட்டிகள் பையில் திருடு போய் விட்டதாகவும், அந்த பேருந்தின் நடத்துனரிடம் ஆஜர் எதிரி தெரிவித்தவுடன் அவர்கள் மேற்படி பேருந்தை வேறு எங்கும் நிறுத்தாமல் ஓமலூர் காவல் நிலையத்திற்கு ஓட்டி வந்ததாக தனது வாக்குமூலத்தில் தெரிவித்தார்.

3. ஓமலூர் காவல் நிலையத்தில் ஆஜர் எதிரியை விசாரித்தனர். ஆஜர் எதிரி அவர் அணிந்திருந்த உள்ளாடையில் (ஜட்டி) 2 1/2 கிலோ தங்க கட்டியை ஒளித்து வைத்திருந்ததாக ஒப்புக் கொண்டார். மேற்படி தங்கம் பீமா ஜுவ்லர்ஸ் திருவணந்தபுரத்தில் இருந்து சேலம் கோயம்புத்தூர் ஜுவ்லர்ஸ் அவர்களுக்கு கொண்டு வரப்பட்டது என்றும் அதை தான் அபகரித்து வசதியான வாழ்க்கை வாழலாம் என்று தனது வாக்குமூலத்தில் தெரிவித்தார்.

4. மேலும் அரபிக் கல்லூரிக்கு எதிரே தேசிய நெடுஞ்சாலையின் தென்புறம் எம்.ஜி.ஆர் நகரில் உள்ள ஒரு முட்புதரில் தங்க கட்டிகளை மறைத்து வைத்திருந்தாகவும், அவ்வப்போது தங்க கட்டியை உடைத்து தனது தேவைக்கு பூர்த்தி செய்துகொள்ள எடுத்து சென்ற போது காவல் துறையினர் தன்னை பின் தொடர்கிறார் என்று நினைத்து மற்ற தங்க கட்டிகளை மறைத்து வைத்திருந்த முட்புதரிலேயே தான் எடுத்து சென்றிருந்த தங்க கட்டியை கொண்டு வந்து மறைத்து வைத்து விட்டதாக ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறினார். மேற்படி தங்க கட்டிகளை காவல் ஆய்வாளரிடம் கொடுப்பதாகவும் ஒப்புக் கொண்டார்.

5. எதிரி பன்னீர் செல்வத்தின் ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் எனது கிராம உதவியாளர் அன்பழகன் என்பவரும் சாட்சி கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். **(அந்த 1வது கையெழுத்து அ.சா.ஆ. ஆக 3 குறியீடு செய்யப்பபடுகிறது).** ஒப்புதல் வாக்குமூலத்தை காலை 08.00 மணி முதல் பதிவு செய்தார்கள். பின்பு எதிரி தங்க கட்டியை புதைத்து வைத்திருந்த டால்மியா போர்டு பஸ்டாப் எதிரே எம்ஜிஆர் நகர் பகுதியில் பழைய பாலத்திற்கு தென்மேற்கே முட்புதரில் சிறு சிறு கற்கள் அமைந்த பகுதியில் காவல் ஆய்வாளர் மற்றும் நாங்கள் உடன் இருக்க எதிரி அந்த முட்புதருக்கு அருகில் தோண்டி மறைத்து வைத்திருந்த தங்க கட்டிகளை எடுத்து ஆஜர் செய்தார். அதனை காவல் ஆய்வாளர் கைப்பற்றும் மகஜரில் கைப்பற்றினார். கைப்பற்றப்பட்ட பொருட்கள் 1. பழைய பிளாஸ்டிக் பை, 2. பீமா ஜுவ்லர்ஸ் ரசீது ஜெராக்ஸ், 3. 1000 கிராம்

எடைக் கொண்ட தங்க பிஸ்கட் 1 4. வேறுபட்ட எடைகளை கொண்ட 7 தங்க பிஸ்கட் மற்றும் சிறு சிறு தங்க கட்டிகள் ஆக மொத்தம் சுமார் 2 1/2 கிலோ தங்க கட்டிகளை காவல் ஆய்வாளரிடம் எதிரி ஒப்படைத்தார். காவல் ஆய்வாளர் அதனை பெற்றுக் கொண்டார்.

6. அந்த கைப்பற்றும் மகஜரில் நானும் எமது கிராம உதவியாளர் அன்பழகன் என்பவரும் சாட்சி கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றும் மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். **(அந்த 1வது கையெழுத்து அ.சா.ஆ. ஆக 3 குறியீடு செய்யப்பபடுகிறது).** காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

7. நான் 12.03.2012 ம் தேதி முதல் 31.03.2014 ம் தேதி வரை கிராம நிர்வாக ஆலுவாளராக அந்த பகுதியில் இருந்தேன். நான் 01.05.2012 ம் தேதி கிராம நிர்வாக அலுவலகத்தில் இருந்த போது காலை 07.50 – 07.55 மணிக்குள் ஓமலூர் காவல் நிலையத்தில் இருந்து ஒருவரை காவல் ஆய்வாளர் என்னை அழைத்து வர சொல்லியிருந்தார். நான் கிராம நிர்வாக அலுவலகத்தில் இருந்து வெளியே செல்லும் போது எனது மேல் அதிகாரிகளுக்கு தகவல் சொல்லிவிட்டு செல்ல வேண்டும் என்றால் எனது கிராம நிர்வாக அலுவலகத்திற்கு உட்பட்ட பகுதிக்கு சென்றால் தகவல் தெரிவிக்க வேண்டியது இல்லை.

8. எனது கிராம நிர்வாக அலுவலகத்தில் இருந்து நானும் கிராம உதவியாளரும் எதிரியை கைது செய்த இடத்திற்கு தனித்தனியே இருசக்கர வாகனத்தில் சென்றோம். அந்த இடம் எனது அலுவலகத்தில் இருந்து சுமார் 3/4 கி.மீ இருக்கும். நான் மேற்படி பணியில் இருந்த போது ஓமலூர் வசித்து வந்தேன். அப்போது சுமார் அந்த இடத்தில் சுமார் 3 காவலர்கள் இருந்தார்கள். வேறு யார் இருந்தார்கள் என்றால் என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. எனது முன்னிலையில் பதிவு செய்த ஒப்புதல் வாக்குமூலத்தில் காவல் ஆய்வாளர் தான் எழுதினார் என்று நினைக்கிறேன். சரிவர ஞாபகம் இல்லை.

9. வழக்கு சொத்துக்களை கைப்பற்றிய முட்புதருக்கு அருகில் ரயில்வே பாதையில் சில ஆக்கிரமிப்பு பெட்டி கடைகள் மற்றும் 20 – 30 வீடுகள் இருந்தது. முட்புதருக்கு அருகில் வீடுகளோ கடைகளோ இல்லை. சில தூரத்தில் தான் உள்ளது.

எதிரியிடம் இருந்து சுமார் 15 நிமிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது. கைப்பற்றுதல் மகஜர் தயாரித்த போது 08.15 மணி இருக்கும். முட்புதரை எவ்வளவு ஆழம் தோண்டி எடுத்தார் என்றால் சுமார் 1 அடி ஆழம் அங்கு இருக்கும் கற்களை வைத்து தோண்டி எடுத்தார். நான் சொல்வது போல் இவ்வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்படவில்லை என்றாலும் காவல் ஆய்வாளர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

10. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் அவ்வாறு சென்று இருந்தால் எந்த இடத்தில் வைத்து கைப்பற்றும் மகஜர் தயாரிக்கப்பட்டது என்று சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. கைப்பற்றப்பட்ட தங்க கட்டிகளின் எடையை கைப்பற்றப்பட்ட இடத்தில் வைத்து எவ்வாறு அளந்தார் என்றால் அருகில் இருந்த இனிப்பகத்தில் இருந்து எடை இயந்திரம் கொண்டு வரப்பட்டு கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை அளவீடு செய்யப்பட்டது. வழக்கு சொத்துக்களை கைப்பற்றப்பகுதிக்கு அருகில் இனிப்பகம் ஏதும்இல்லை என்றால் சரியல்ல.

11. எனது முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றாலும் எதிரி நான் வேலை செய்த அலுவலகத்தில் உட்பட்ட பகுதியில் கைது செய்யப்பட்டதால் வழக்கிற்காக ஆய்வாளர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் 7 பக்கங்கள் உள்ளது அதில் ஆய்வாளர் கேட்டுக் கொண்ட சங்கதிகள் மட்டும் தான் நீதிமன்றத்தில் கூறியுள்ளேன் என்றால் வழக்கிற்கு தேவையானதை மட்டும் கூறியுள்ளேன். எதிரியின் குடும்ப விபரங்களை கூறவில்லை. என்னுடன் கிராம உதவியாளர் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றும் மகஜர் தயார் செய்த போது இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

விசாரணை முடிந்த நேரம்: மதியம் 02.43 மணி,

ஒம்/−ச.ஷர்மிளா.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.